DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 302/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : பாப்பா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 25.07.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 25th July 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

<u>முதல்விசாரணை:</u>

நான் தற்போது மேலநீலிதநல்லூரில் குடியிருந்து வருகிறேன். எனக்கு தற்போது 68 வயதாகிறது. அ.சா.1 யை தெரியும். பட்டியல் சாட்சி 2 சுப்பையாகோனார் தற்போது இறந்துவிட்டார். எதிரியை தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும்தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

21.02.2014 ம் தேதி காலை 9.30 மணிக்கு வெளியப்பசாஸ்தா கோவிலுக்கு வடக்குபக்கம் உள்ள மக்காச்சோள பயிர் செய்துள்ள தோட்டத்தில் வைத்து தனது மாட்டை மேயவிட்டதை அ.சா.1 தட்டிக்கேட்டபோது எதிரி அ.சா.1 யை

பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. கல்லை எடுத்து அ.சா.1ன் தலையிலும், இடது கன்னத்தில் எறிந்தார் என்றால் சரியல்ல. நானும், அக்கம்பக்கம் உள்ளவர்களும் சத்தம் போடவும் எதிரி அ.சா.1யை கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. மேற்படி சம்பவம் நடைபெற்றது என்றும்,சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 302/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : கிருஷ்ணம்மாள் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 25.07.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 25th July 2025.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது மேலநீலிதநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான்பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். எதிரியை தெரியாது. 10 வருடத்திற்கு முன்பு ஒரு நாள் நான் வீட்டில் இருந்தேன். எனது கணவர் ஒருநபருடன் சண்டை போட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக தகவல் சொன்னார். நான் மாலை 5 மணிக்கு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை சென்று எனது கணவரை பார்த்தபோது எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

21.02.2014 ம் தேதி காலை 9.30 மணிக்கு வெளியப்பசாஸ்தா கோவிலுக்கு வடக்குபக்கம் உள்ள மக்காச்சோள பயிர் செய்துள்ள தோட்டத்தில் வைத்து தனது மாட்டை மேயவிட்டதாக எனது கணவர் கேட்டு அதனால்தான் பிரச்சனையா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரி எனது கணவரை பார்த்து அசிங்கமாக பேசி கல்லால் அடித்து காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக கேள்விப்பட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதற்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்குவிசாரணை இல்லை என தெரிவித்தார்.**